Registered as a News Paper in Sri Lanka ] பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 மார்கழி ( 27 - 12 - 1990 ) வியாழக்கிழமை ஓசை 302

## வடபகுதி காச நோயாளர் வைத்திய வசதியின்றி அவதி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இயங்கி வந்த ஒரேயொரு காசநோய் வைத்தியசாலையான மயிலிட்டி வைத்தியசாலை சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக செயற்பட முடியாத நிலையில் உள்ளதனால் வட பகுதி நோயாளர்கள் பெரும் சிரமமடைந்து வருகின்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படுவான்கரைப் பகுதியில் இருந்து

# வெள்ளத்தினால் வெளியேறிய

# 200 தமிழர் சுட்டுக் கொலை

## மக்கள் முன்னணி பிரதித் தலைவர் கரிகாலன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

படுவான்கரைப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி நகர்ப்புறப் பகுதிகளை நாடிச்சென்ற சுமார் இருநூறுக்கும் அதிகமானோர் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் கரிகாலன் குற்றம் சாட்டியுள்ளார்,

கடந்த வாரம், இழக்கில் பெரிய போரதீவு, சின்னப் போரதீவு தொடக்கம் ருகம் வரையான படுவான்கரைப் பகுதிகளில் ஊரடங்குச் சட்டத்தை சிறிலங்கா இராணுவம் பிறப்பித்திருந்தது. இந்த வேளையில் விடுதலைப்புலிகள் மீதான நடவடிக்கை என்ற போர்வையில் அப்பாவி பொது மக்கள் துன்புறுத்தப்பட்டுள்ளனர். ஆண்கள்-பெண்கள் என்று வயது வேறுபாடு இன்றிச் சுமார் இருநூறு பேர் வரையில சுட்டுக் கொல்லப் பட்டனர்.

கடந்த வாரம், இழக்கில் பெரிய போரதீவு, சின்னப் போரதீவு, வெள்ளவெளி, மண்டூர், படுவான்கரைப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பிறப்பித்து இருந்த ஊரடங்கு வேளையிலேயே இந்த பொது மக்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்

கடந்த யூன் மாதத்திற்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)



### தொடர்ச்சியான மழையினால்

## அம்பாறை மாவட்டத்தில் 30,000 மக்கள் வீடிழப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களாக பெய்து வரும் மழையினால் 30,000 மக்கள் வீடுவாசல்களை இழந்து அகதிகளாகியுள்ளனர்.

பொத்துவில், அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதி

4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று மீட்புநிதி செலுத்தலாம

(நமது நிருபர்)

நல்லூர், கோப்பாய் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தோர் (27-12-90) இன்று காலை 10 மணியிலிருந்து பிற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நினைவு தூபி திறப்பு

(யாழ்ப்பாணம்)

லெப். சங்கீதா, லெப். செல்லக்கிளி, லெப. கேணல் புலேந்திரன், லெப். கேணல் திலீ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புதுவருடத்தை முன்னிட்டு சிலதினங்கள் போர் நிறுத்தம்

### கிட்டு தெரிவித்ததாக இந்திய வானொலி

(சென்னை)

புதுவருடத்தை முன்னிட்டு சிலநாட்களுக்கு சிறிலங்கா இராணுவத்திற்கு எதிரான போரை நிறுத்தி வைக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இணங்கியுள்ளனர்.

லண்டனில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகரான கிட்டு தொலைபேசியில் இதனைத் தெரிவித்தாரென இந்திய வானொலி அறிவித்தது எனினும் இந்தச் செய்தி விடுதலைப்புலி கள் வட்டாரங்களால் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

# விடுதலைப் போரில் மாணவர்களும் பங்காற்றுவது அவசியம் - யோகி

(யாழ்ப்பாணம்)

"மாணவர்கள் கல்வியில் தமது திறமைகளைக் காட்டினால் மட்டும் அதுபோதுமான தொன்றல்ல. இந்த மண்ணின் விடுதலையை நோக்கி நடைபெறும் ஆயுதமேந்தியபோராட்டத்திலும் அவர்கள் பங்குபற்றுவது மிக அவசியமான ஒன்று" என நேற்று லெப். கேணல் ரூபனின் ஆறாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில்கலந்துகொண்டு உரையாற்றுகையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர்நாயகம் யோகரட்ணம் யோகி தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் அவர்மேலும் கூறுகையில் எமது பகுதிகளில் சமூகங்களிடையேயான சாதிப் பிரச்சினைகள் இன்றும் முற்று முழுதாக ஒழிந்துபோனதாக தெரியவில்லை என்று குறிப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புதிய நகராக்கத் திட்டப்படி யாழ். பஸ் நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ் மாவட்டத்தில் உள்ள பல்வேறு உயர் அதிகாரிகள், பொறியியலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அறிஞர்கள் ஆகியோரால் தயாரிக்கப் பட்டு வரும் புதிய நகராக்கல் திட்டத்தின் படி குண்டு வீச்சினால் சின்னா பின்னமாகிய நிலையில் இருக்கும் தற்போதய யாழ். பிரதான பேருந்து நிலையம் தொடர்ந்து அதே இடத்தில் இருக்காது என

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மிதிவெடிச் சம்பவம் ஐவர் கால்களை இழந்தனர் ஐந்துபேர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த மிதிவெடிச்சம்பவத்தில் ஐந்துபேர் கால்களை இழந்ததாகவும் ஐந்துபேர்படுகாயம் அடைந்ததாகவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மயிலிட்டி வள்ளங்கள் கடற்படையால் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி கடற்கரைப் பகுதியில் நின்ற மீன்பிடி வள்ளங்கள், கட்டுமரங்கள், வள்ளங்களை உருவாக்கப் பயன்படுத்தும் மரங்கள் மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றை சிறிலங்கா கடற்படையினர் இயந்திரப் படகுகளில் கட்டி இழுத்துச் சென்றுள்ளனரென மயிலிட்டி கிராமிய கடற்தொழிலாளர் சனசமூக சங்கத் தலைவர் சே. தனபாலசிங்கம் கவலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் மயிலிட்டிப் பகுதி வீடுகளின் நிலைமை பற்றி குறிப்பிடுகையில் மயிலி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் வங்கிக்கு குமணவில் பணம் அனுப்ப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய மக்கள்வங்கி கிளைகளுக்குத் தேவையான பணத்தின் ஒரு பகுதியை வட பகுதிக்கு அடுத்து வரவிருக்கும் 'குமண' என்ற கப்பலில் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக மக்கள் வங்கி தலைமையகம் வடபிராந்திய மக்கள் வங்கி முகாமையாளருக்கு அறிவித்துள்ளது.

வடபகுதி மக்கள் வங்கிக் கிளைகளுக்குத் தேவையான

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனி. லொறி உரிமையாளர் ஊர்காவற் படையால் கொலை

(கோப்பாய்)

வவுனியாவில் ஊர்காவல் படையினரால் லொறி உரிமையாளர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். அச்சுவேலியைச்சேர்ந்தவேலாயும்செல்வநாயகம் (52 வயது) என்பவரே கொலையுண்டவராவர் இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவர்.

நேற்று முன்தினம் (25 ஆம் திகதி) இவர் தமது லொறியில் பொருள்கள் ஏற்றிவந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'சார்க்' மாநாட்டை குழப்ப மாலேயில் சதி நடந்தது

(மாலே)

மாலைதீவின் தலைநகரமான மாலேயில் நடந்து முடிந்த தென்னாசியப் பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு மாநாட்டை குழப்ப சதி முயற்சிகள் இடம்பெற்றதாக மாலைதீவு அதிபர் கயூம் தெரிவித்து இருப்பதாக கொழும்பிலு செய்திகள் வெளியாகியுள்ளன.

மாநாட்டு மண்டபத்தில் வெடிகுண்டுகளை வெடிக்க வைக்க மேற்கொள்ளப்பட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் பயிற்சிக கலாசாலை பரீட்சைகள் நடைபெறவில்லை

(நல்லூர்)

பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இறுதியாண்டுப் பரீட்சை நேர சூசிகையின் படி நேற்று நடைபெறவில்லை. பரீட்சைத் திணைக்களத்திலிருந்து அனுப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### ரதிவோச் வேக்ஸ்

ரதிவோச் வேக்ஸ் அன் கிரோசிஸ்:- எமது ஸ்தாபனம் இல 44, 46, கஸ்தூரியார் வீதியில் மீண்டும் 1-12-90 முதல் இயங்கி வருகின்றது தவிர, இல.12, பொன்னையா லேன், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையிலும் தொடர்ந்தும் இயங்கிவரும் என்பதையும் எமது வாடிக்கையாளருக்கும், சகல மணிக்கூடு பாவனையாளருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம் (50 வருடகால நம்பிக்கைச் சின்னம் ரதிவோச் வேக்ஸ்) - நிர்வாகம்.

(B-1648)

### விற்பனைக்கு

புத்தாண்டு புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல. 256A பருத்தித்துறை வீதி, நல்லூர். "அறிஞர் அறிவியகம்" 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(R-988)

நத்தார், புதுவருட காட்டைகள் அனைத்தும் விற்பனையாகிக்கொண்டு இருக்கின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். உங்கள் தெரிவுக்குமுந்துங்கள்: அனைத்தும் புதிய டிசைன்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம் நல்லூர், யாழ்ப்பாணம்.

(B-1718)

### டில்கா வாச் வேக்ஸ்
### DILKA WATCH WORKS

வாடிக்கையாளர்களுக்கு! எமது ஸ்தாபனம் மீண்டும் 404, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் முன்பாகவும், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட், பண்டத்தரிப்பிலும், அடியபாதம் வீதி கல்வியங்காட்டிலும் இயங்குகின்றன. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் 60 வருடத்திற்கு மேல் அனுபவமுள்ள தொழிலாளர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B-1653)

லைடன் ரெக்ஸ்ரைல்ஸ்


# பருத்தித்துறை இறங்குதுறை புனரமைப்பிற்கு நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியை உடனடியாக புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த இறங்குதுறையை அரச அதிபரும் பிரதம பொறியியலாளர் அடங்கிய பொறியியலாளர் குழு ஒன்றும் நேரடியாகப் பார்வையிட்டு புனரமைப்பதற்கான ஒழுங்குகளை மேற் கொண்டனர். தற்போது மேற்கொள்ளப்போவது தற்காலிக திருத்த வேலையாக இருக்கின்ற போதிலும் இந்த துறைமுகத்தை திருத்தி அமைப்பதற்கான நிரந்தரத் திட்டமும் உள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

(க)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



முல்லைமணி சு. கபிலன்
(முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவன்)

பிறப்பு 15-09-1971 — அழிப்பு 27-11-1990

பாதகரின் வெறியாட்டத்தால் பாதிவழியிலே நின் பயணத்தை முடித்துக் கொண்டாய். எங்களை விட்டு என்றுமே பிரியாத நீ ஒரு கணப் பொழுதிலேயே அம்மாவின் மடியிலே புன்னகையுடன் சாவை அரவணைத்தாய். எங்கள் எல்லோரதும் நெஞ்சிலே நீங்காது நிறைந்திருக்கும் எம் அன்புச் செல்வமே! உன் ஆத்மா சாந்தியடைவதாக!

நின் பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, அக்காமார்,
அண்ணா, தங்கை, மாமா, மாமி, வினித்தா
பெரியையாமார், பெரியம்மாமார், சித்திமார், சித்தப்பாமார்.

(R-969)

## ஆறாம் மாத நினைவஞ்சலி



அன்னை மடியில் 28 — 05 — 1957

ஆண்டவன் அடியில் 27 — 06 — 1990

ஓவியக் கலைஞர், அமரர்
### விசுவநாதர் கைலாயநாதன்

வளர்ந்து வந்ததோர் ஓவிய மேதையின் அகால மறைவால் கலைஞர்கள், உறவினர்கள், நண்பர்கள் வடிக்கும் கண்ணீர் அஞ்சலி!

ஆத்ம சாந்தியை வேண்டி நிற்கும்
அன்னை, துணைவி, சகோதரர்கள், மைத்துனி, உறவினர், நண்பர்கள்

958/41, கே. கே எஸ் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(B/1770)

## லெப். சங்கீதா அவர்களின்
## நினைவுத்தூபி திறப்புவிழா
## 145 ஆம் நாள் அஞ்சலி
## பொதுக்கூட்டம்



யாழ். கோட்டை முகாம் தாக்குதலில் 05-08-90 அன்று வீரமரணமடைந்த லெப். சங்கீதா நினைவாக திருநெல்வேலி கிழக்கு சங்கீதா வீதியில் ஞானவைரவர் சன சமூக நிலையத்தினரால் நிலைய முன்றலில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி 27-12-90 இன்று வியாழக்கிழமை பி. ப. 4.00 மணிக்குத் திறந்து வைத்து நிலைய வெளி அரங்கில் அஞ்சலிக் கூட்டமும் நடைபெறவுள்ளது. இதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, மகளிர் முன்னணிப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார்கள். கவிதைகள், வில்லுப்பாட்டு, நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும். அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

(R/971)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி


அன்னை மடியில்: 1967



மண்ணின் அடியில்: 1990

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தாயின் மடியில்



தாயக மடியில்

நந்தார். புதுவருட காட் வைகள் அனைத்தும் விற் பனையாகிக்கொண்டு இருக் கின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். உங்கள் தெரிவுக்குமுந்துங்கள்: அனைத்தும் புதிய டிசைன்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி யாழ்ப் பாணம், நல்லூர், யாழ்ப் பாணம்.

(B-1718)

## டில்கா வாச் வேக்ஸ்
## DILKA WATCH WORKS

வாடிக்கையாளர்களுக்கு! எமது ஸ்தாபனம் மீண்டும் 404, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் முன்பாகவும், மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டையிலும் இல. 3 சித் தன்கேணி றோட், பண்டத் தரிப்பிலும், ஆடியபாதம் வீதி கல்வியங்காட்டிலும் இயங்கு கின்றன. சகல மணிக்கூடு களும். றேடியோக்களும் 60 வருடத்திற்கு மேல் அனுப வமுள்ள தொழிலாளர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக் ரோனிக் பற்றறிகளும் விற்ப னைக்குண்டு.

(B-1653)

## லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண் டும் முன்னைய பினான்ஸ் கம்பனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன் புது வருட பண்டிகையை முன் னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர் களுக்கு அறியத்தருகின் றோம்.

(B 1658)

## The Jaffna Education Centre
## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்) O L, A/L, Spoken English, Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்க ளுக்கு விடுதி வசதியுமுண்டு.

(B 1657)

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், கோழித்தீன்உறை, பித்தளை, செம்பு போத்தல் வகைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாகிரா ச, Second Hand Book House 57, ஸ்ரான்லி வீதி, புரசொல், இலங்கை வங்கிக்கு முன் லேன், யாழ்ப் பாணம்.

(B - 1761)



## முல்லைமணி க. கபிலன்
### (முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவன்)

| பிறப்பு | அழிப்பு |
|---|---|
| 15- 09- 1971 | 27- 11- 1990 |

பாதகரின் வெறியாட்டத்தால் பாதிவழியிலே நின் பயணத்தை முடித்துக் கொண்டாய். எங்களை விட்டு என்றுமே பிரியாத நீ ஒரு கணப் பொழுதிலேயே அம் மாவன் மடியிலே புன்னகையுடன் சாவை அரவணைத் தாய். எங்கள் எல்லோரதும் நெஞ்சிலே நீங்காது நிறைந்திருக்கும் எம் அன்புச் செல்வமே! உன் ஆத்மா சாந்தியடைவதாக!

நின் பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, அக்காமார்,
அண்ணா, தங்கை, மாமா, மாமி, வினித்தா
பெரியையாமார், பெரியம்மாமார், சித்திமார்,
சித்தப்பாமார்.

(R-969)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| அன்னை மடியில்: | | மண்ணின் அடியில்: |
|---|---|---|
| 1967 |  | 1990 |
| 06 | | 11 |
| 12 | | 27 |

## தம்பிராசா-செல்வராஜா (செல்வம்)
### (யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவன்)

ஆருயிரே செல்வா! நீ சென்ற வழி யாதோ?
எமையிங்கு தவிக்கவிட்டு நீ பிரிந்து சென்றாயோ?
செல்வம் செல்வம் என்று தேம்புகிறோம் நாங்கள் இன்று
உன் இனிய செவியிரண்டும் செவிடாக ஆனதுவோ?
உனை நாங்கள் கண்ணுற்று திங்கள் ஒன்று ஆகுதய்யா
நீ வருவாய் வருவாயென்று வழிமீது விழிவைத்து
வாஞ்சையுடன் பார்க்கின்றோம். ஆனாலும் நீ இங்கு
வருவதாகத் தெரியவில்லை, வாடுகிறோம் நாங்களிங்கு;

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

உன்பிரிவால் வாடும்,
பெற்றோர், உடன்பிறப்புக்கள்,
உறவினர்கள், நண்பர்கள்;

கற்சிலைமடு,
ஒட்டுசுட்டான்;

(R; 975)

## 145 ஆம் நாள் அஞ்சலி பொதுக்கூட்டம்



யாழ்: கோட்டை முகாம் தாக்குதலில் 05-08-90 அன்று வீரமரணமடைந்த லப் சங் கீதா நினைவாக திருநெல்வேலி கிழக்கு சங்கீதா வீதியில் ஞான வைரவர் சனசமூக நிலையத் தினரால் நிலைய முன்றலில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி 27-12-90 இன்று வியாழக்கிழமை பி. ப. 4.00 மணிக்குத் திறந்து வைத்து நிலைய வெளி அரங் கில் அஞ்சலிக் கூட்டமும் நடை பெறவுளளது. இதில் விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணி, மகளிர் முன்னணிப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார்கள். கவி தைகள், வில்லுப்பாட்டு, நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும். அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

(R/971)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தாயின் மடியில் | | தாயக மடியில் |
|---|---|---|
| 06 |  | 14 |
| - | | - |
| 03 | | 11 |
| - | | - |
| 1971 | | 1990 |

## வீரவேங்கை பராசக்தி
### ம. மாலினிதேவி (கௌரி)

மண் மீட்க உயிர் தந்த
மாவீரர் வரிசையிலே - எம்
கண்மணியே நீயும்
இடம் பிடித்துக் கொண்டாய்!
கண்கலங்கி கைபிசைந்து
உடல் சோர்ந்து வாடினாலும்
எண்ணத்திலே நிறைந்து கொண்டாய்!
உன் இலட்சியத்தைத் தாங்கி நிற்போம்;

15-11-90 அன்று அன்னாரின் இறுதிக் கிரியைகளின் போது எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறியும் உத விகள் புரிந்தோர்க்கும் எமது நன்றியை தெரிவிப்ப தோடு 27-12-90 இன்று வியாழக் கிழமை அன்னா ரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியை களிலும் பங்கு கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் தோழர்கள் தோழியர்களையும் உற்றார் உறவினர் களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன்முகம் காணாது வாடும்
தாய் அருந்ததி
தம்பிமார் மோகன், கணேஷ்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

டச்றோட்,
சாவகச்சேரி.

(R-950)

சிந்தனைக்கு

ஒழுக்கத்தை உருவாக்குவதே, கல்வியின் குறிக்கோள்
— ஹெர்பர்ட் ஸ்பென்சர்

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 27-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 023-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 03


## அங்கு கட்டாயக் கல்வி இங்கு கல்விக்கு குழிபறிப்பு

ஐந்து வயதிற்கும், பதினாறு வயதிற்கும் உட்பட்டவர்கள் பாடசாலைக்குக் கட்டாயமாகச் செல்ல வேண்டும், பெற்றோரும் கட்டாயமாகப் பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்ப வேண்டும் என்பனவற்றை உள்ளடக்கிய சட்ட மூலம் ஒன்றை பாராளுமன்றத்தில் அடுத்த வருட முற்பகுதியில் சமர்ப்பிக்கவுள்ளதாக உயர் கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அதோடு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வெற்றி அளிக்காத பட்சத்திலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்த இவ்வாறான நடவடிக்கைகள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, மறுபுறத்தில் ஓர் இன மக்கள் கல்வியுரிமை மறுக்கப்பட்டு, அவர்களின் கல்விக் கூடங்களும், நூலகங்களும் அழிக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை, குடியேற்றப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை போன்ற அடிப்படை உரிமைப் பிரச்சினைகளின் அடிபொற்றி எழுந்தபோது தமிழரின் கல்வி உரிமை மறுக்கப்பட்டபோதுதான் போராட்டம் முனைப்பும் தீவிரமும் பெற்றது.

1970 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முறையானது தமிழர்கள் உயர்கல்வி பெறுவதற்கான உரிமையை மறுத்தது. திட்டமிட்ட ரீதியில் சிறிலங்கா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் புறக்கணிப்பானது பல்கலைக்கழக அனுமதியில் தமிழர்கள் தரப்பில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இதற்கு எதிராகப் பலமான போராட்டம் தமிழர் தரப்பில் இருந்து மேற்கொள்ளவும் பட்டது. ஆனால், அரசாங்கம் இந்தக் கொள்கையைக் கைவிடவில்லை. இதனால் இந்தப் போராட்டங்கள் தமிழர் தேசிய போராட்டத்தின் ஓர் அங்கமாகியது.

அதேவேளை, இந்தக் கொள்கையை சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் அமுல்படுத்தினாலும், தொடர்ந்து வந்த ஐக்கிய தேசியக் கட்சியும் இந்தக் கொள்கையைக் கைவிடவில்லை உயர்கல்வியில் தமிழர் புறக்கணிக்கப்பட்டே வந்தனர். அத்தோடு தமிழர்களின் கல்வி வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீட்டையும் குறைவாகவே செய்து வந்தனர் எடுத்துக்காட்டாக யாழ். பல்கலைக்கழகத்திற்கு பின்னர் தொடங்கப்பட்ட ருகுண பல்கலைக்கழகம் தொடர்ந்தும் பெருமளவு நிதி ஒதுக்கீட்டைப் பெற்று வருவதோடு, அமைப்பு ரீதியில் பெரும் வளர்ச்சியையும் கண்டுள்ளது.

உயர்கல்வி இவ்வாறு திட்டமிடப்பட்டு புறக்கணிக்கப்பட்டது போன்றே அடிப்படை, இடைத்தரக் கல்வியிலும் தமிழரைப் பொறுத்து பாரபட்சம் காட்டப்பட்டு வந்ததோடு, முன்னர் வளர்ச்சி அடைந்திருந்த கல்வி ரீதியான அடிப்படை வசதிகளையும் அழிப்பதிலேயே சிறிலங்கா அரசாங்கம் ஆர்வம் காட்டி வந்துள்ளது.

1983 ஆம் ஆண்டு தமிழர் தேசிய போராட்டம் கூர்மையடைந்ததிலிருந்து பல பாடசாலைகள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டன இதனால் அப் பாடசாலைகளில் கல்வி கற்றோர் நிர்க்கதியாக விடப்பட்டனர் பல பாடசாலைகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி அழிந்தன.

# புரதச்சத்து நிறைந்த சுவையான

# பி. ஜி. 11 - 11 அரிசி

ஒவ்வொரு நாட்டிற்கும் ஏற்ற நெல்லினத்தைத் தெரிவுசெய்வதில் விவசாய ஆராய்ச்சியாளர்கள் கடந்த பலவருடங்களாக முயற்சி எடுத்து வருகிறார்கள். அதிக அளவில விளைச்சல் தரக்கூடிய நெல் இனத்தைத் தெரிவு செய்வதே இந்த ஆராய்ச்சியின் நோக்கமாகும். எங்கள் நாட்டிலும் பிரதான உணவாக அரிசி அமைவதனாலும், இப்பொருளில் தன்னிறைவு இன்னும் அடையாததனாலும், அதிக விளைச்சல் தரும் நெல்லினத் தேர்வு முக்கியத்துவம் அடைகின்றது.

ஆராய்ச்சியாளர்கள் ஆரம்பத்தில் பச்சைப் பெருமாள், ஒட்டவாலன், வெள்ளை இளங்கலயன், பெரிய வெள்ளை, மிளகு சம்பா போன்ற உள்ளூர் நெல்லினங்களை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்தனர். பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளின் முக்கிய உணவாக அரிசி அமைந்திருந்தாலும் இந் நாடுகளில் பயிரிடப்படும் பாரம்பரிய நெல்லினங்கள் குறைந்த விளைவுகளையே தரக்கூடியதாய் இருந்தன.

மிக உச்சமான ஆராய்ச்சியின் பெறுபேறாக ஓர் அதிசய விளைச்சலைத் தரக்கூடிய ஐ. ஆர். 8 என்னும் இனத்தைத் தெரிவு செய்தார்கள். இரு வெவ்வேறு இனங்களைக் கலந்து தெரிவு செய்ததனால் ஐ. ஆர். 8 என்னும் புதிய இனம் தோன்றியது. இதன் உச்ச விளைவு ஏக்கருக்கு 270 புசல்கள். விவசாயிகளுக்கு இத்தகைய இனத்தைப் புறக்கணிக்க முடியவில்லை. இந்த இனம் எல்லா நாடுகளுக்கும் விரைவில் பரவியது.

கிழக்குப் பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் பல்லாயிரக் கணக்கான ஏக்கர்களில் இந்த இனம் பயிரிடப்பட்டது. உலகம் முழுவதும் இவ்வினத்தைப் போற்றி எங்கள் மகுதியில் பசுமைப் புரட்சி மலர்ந்து விட்டது எனப் பாராட்டினார்கள். ஆனால் இவ்வினத்தின் மகிமை நிலைநிற்கவில்லை. பல பிரச்சினைகள் உருவாகின. முன்பு ஒரு நாட்டிலும் தென்படாத பூச்சி, புழு அல்லது பூஞ்சணநோய் இவ்வினத்தைப் பாரதூரமாகத் தாக்கியது. இதனால் விளைவு துண்டிக்கப்பட்டது இவ்வினத்தைப் பயிரிடலில் அதிக அளவு செலவும் ஏற்பட்டது.

இதனால் அரிசியின் வெளித்தோற்றத்தில் உள்ள நிறத்திற்காக எந்த ஒரு நெல் வர்க்கத் தேர்வுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. வேறு முக்கிய குணாதிசயங்களுக்காக அபிவிருத்தி செய்யப்படும் புதிய ரக அரிசிக்கும் அரிசியின் நிறத்திற்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. அரிசியின் நிறம் முக்கியத்துவமில்லாத ஒரு இடை நிகழ்ச்சியே தவிட்டுத் தன்மையிலோ அன்றிப் புரதச் செறிவிலோ, நிற அரிசி வெள்ளை அரிசியை விட மேன்மையானது என்பதில் எவ்வித உண்மையுமில்லை, வெள்ளை அரிசித் தவிடும் அதே நிறமாக இருப்பதால் தவிட்டுச் செறிவினை எங்களால் எளிதில் அவதானிக்க முடிவதில்லை என்பதே முழு உண்மையானதாகும்.

எமது பிரதேசத்தில் நிற அரிசிதான் சத்து நிறைந்தது. வெள்ளை அரிசி சத்தில்லாதது என்ற மாதிரியான கருத்து இருக்கின்றது உண்மையில் போஷாக்கிலும் சத்துக்களிலும் வெள்ளை அரிசி ஏனைய அரிசிகளுக்கு நிகரானதே.

நீர்ப்பாசன வசதியுடனான நெற் செய்கை பற்றிய ஆய்வில் பி ஜி 11 11 இனம் தொடர்ச்சியாகச் சிறந்த விளைச்சலைத் தரவல்லது என்று நாம் அறிய முடிந்தது. இந்த இனப்பயிர் இப்பொழுது மன்னார், வவுனியா பகுதிகளில் பிரதானமாகச் செய்கை பண்ணப்பட்டு வருகிறது. இவ்வினம் மலேசிய இனத்தை எங்கள் நாட்டு உலபினம் ஒன்றுடன் கலந்து பெற்ற ஓர் இனமாகும் (என்கரெக் X எச் -8) X எச் 8, 1969 ஆம் ஆண்டு சிறுபோகச் செய்கையின் போது மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த முயற்சியில் ஐ ஆர். 8 இனத்தையும் விட அதிகளவு விளைச்சலை பி ஜி 11 - 11 இனம் கொடுத்தது தொடர்ந்து 20 வருடங்களாக, நிதானமான விளைச்சலைக் கொடுப்பதனால் சிறந்த அனுபவமுள்ள விவசாயிகள் அனைவரும் இவ்வின நெல்லையே விரும்புகிறார்கள்.

இந்த நெல்லின் மணி அளவில் சிறியதாக இருப்பதனால் விதைப்புக்குப் பயன்படுத்தும் அளவில் மற்றைய இனத்திலும் பார்க்க 25 வீதம்

குறைந்த இடங்களிலும் (உ+ம: மானாவாரிப்பூமி, குறுகியகால நெல்லினம் விதைக்கப்படும் வயல்கள்) வெள்ளை அரிசி கொண்ட குறுகியகால, நிதானமான விளைதிறமுடைய இனங்களைப் பயிரிடுவது பொருத்தமானது.

புதிய நெல்லினங்களுக்கு இணையாக பழைய உள்ளூர் இன நெல் வகைகளைக் கருத முடியாது. உள்ளூர் இனங்களின் விளைச்சல் மிகக்குறைவாக இருப்பதனாலும் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண வேண்டியிருப்பதனாலும் பழைய இனங்களை உடனடியாக ஒதுக்கி விட்டு அதிக விளைச்சல் தரக்கூடிய புதிய இனங்களைப் பயிரிட வேண்டியது அவசியமாகிறது. இக்கால கட்டத்தில் பழைய இனங்களையே பயிரிட்டுக் கொள்வது பொருத்தமற்ற செயலாகும். எனினும் பல விவசாயிகள் பி. ஜி 11 - 11 இன நெல்லைப் பயிரிடுகின்றனர். எமது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவு தன்னிறைவு அடைய விவசாயிகளின் இம்முயற்சி முக்கியமானதாகும்.

எமது தன்னிறைவு முயற்சியில் நாம் எல்லோரும் பங்காளிகளாக இருப்பதனால் நாம் நிற அரிசியை உணவாகக் கொள்வதைத் தவிர்த்து பி ஜி. 11 - 11. இன அரிசியையோ அல்லது வேறு குறைந்த வயதுடைய வெள்ளை நிற அரிசியினங்களையோ உணவாகக் கொள்ளப்பழக வேண்டும். சம அளவிலான பல்வேறுபட்ட அரிசியினங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது பி. ஜி 11-11 மணி (அரிசி) அதன் சிறிய அளவின் தன்மையினால் அதிக அளவிலான பரப்பளவைக் கொண்டிருப்பதனால் அதிக அளவு தவிட்டைக் கொண்டிருக்கிறது இதனால் அதிக அளவிலான புரதத்தையும் கொண்டுள்ளதாகிறது இந்த அரிசி தன்னுள் 8 வீதமான புரதச் சத்தைக் கொண்டுள்ளது. ஆகவே இந்தப் பிரதேசத்தில் விளைகின்ற மற்ற எந்த அரிசியிலும் பார்க்க அதிகமான அளவு போஷாக்குத் தன்மையுடையதாகிறது அன்றி சுவை எவ்வகைச் சாப்பாவுக்கும் நிகரானதாகிறதோடு சமையல் செய்வதற்கும் உள்ளூர் இன அரிசிகளிலும் குறைந்த அளவு நேரமே எடுக்கிறது.

எனவே பாரம்பரிய இனங்களாயினும் நிற அரிசியை உணவாகக் கொள்வதைவிட்டு நாம் எல்லோரும் பி ஜி 11-11

கூடங்களும், நூலகங்களும் அழிக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை, குடியேற்றப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை போன்ற அடிப்படை உரிமைப் பிரச்சினைகளின் அடிபொற்றி எழுந்தபோது தமிழரின் கல்வி உரிமை மறுக்கப்பட்டபோதுதான் போராட்டம் முனைப்பும் தீவிரமும் பெற்றது.

1970 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முறையானது தமிழர்கள் உயர்கல்வி பெறுவதற்கான உரிமையை மறுத்தது. திட்டமிட்ட ரீதியில் சிறிலங்கா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் புறக்கணிப்பானது பல்கலைக்கழக அனுமதியில் தமிழர்கள் தரப்பில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இதற்கு எதிராகப் பலமான போராட்டம் தமிழர் தரப்பில் இருந்து மேற்கொள்ளவும் பட்டது ஆனால், அரசாங்கம் இந்தக் கொள்கையைக் கைவிடவில்லை. இதனால் இந்தப் போராட்டங்கள் தமிழர் தேசிய போராட்டத்தின் ஓர் அங்கமாயிற்று.

அதேவேளை, இந்தக் கொள்கையை சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் அமுல்படுத்தினாலும், தொடர்ந்து வந்த ஐக்கிய தேசியக் கட்சியும் இந்தக் கொள்கையைக் கைவிடவில்லை உயர்கல்வியில் தமிழர் புறக்கணிக்கப்பட்டே வந்தனர். அத்தோடு தமிழர்களின் கல்வி வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடுகளையும் குறைவாகவே செய்து வந்தனர் எடுத்துக்காட்டாக யாழ். பல்கலைக்கழகத்திற்கு பின்னர் தொடங்கப்பட்ட ருகுண பல்கலைக்கழகம் தொடர்ந்தும் பெருமளவு நிதி ஒதுக்கீட்டைப் பெற்று வருவதோடு, அமைப்பு ரீதியில் பெரும் வளர்ச்சியையும் கண்டுள்ளது.

உயர்கல்வி இவ்வாறு திட்டமிடப்பட்டு புறக்கணிக்கப்பட்டது போன்றே அடிப்படை, இடைத்தரக் கல்வியிலும் தமிழரைப் பொறுத்து பாரபட்சம் காட்டப்பட்டு வந்ததோடு, முன்னர் வளர்ச்சி அடைந்திருந்த கல்வி ரீதியான அடிப்படை வசதிகளையும் அழிப்பதிலேயே சிறிலங்கா அரசாங்கம் ஆர்வம் காட்டி வந்துள்ளது.

1983 ஆம் ஆண்டு தமிழர் தேசிய போராட்டம் கூர்மையடைந்ததிலிருந்து பல பாடசாலைகள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டன இதனால் அப் பாடசாலைகளில் கல்வி கற்றோர் நிர்க்கதியாக விடப்பட்டனர் பல பாடசாலைகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி அழிந்தன.

இவ்வாறு அழிக்கப்பட்ட பாடசாலைகள், கல்லூரிகள் பல தேசிய பாடசாலைகள் வரிசையில் அடங்குவதோடு, இலங்கையில் உயர் நிலையில் உள்ளபலரை உருவாக்கிய பாடசாலைகளும் ஆகும்.

மேலும், பாடசாலை மாணவர்கள் கைது செய்யப் படுகின்றார்கள், படுகொலை செய்யப்படுகின்றார்கள். ஆசிரியர்களுக்கும் இதே நிலைதான் உள்ளது எடுத்துக் காட்டாக துறை நீலாவணையில் பரீட்சை எழுதச்சென்ற மாணவர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப் பட்டார்கள்.

இவற்றிற்கும் மேலாக யுத்த சூழ் நிலையில் தமிழர்கள் சிக்கியுள்ள வேளையில், நாடு தழுவிய பரீட்சைகளை நடத்தி தமிழர்களை அவற்றில் இருந்து ஒதுக்கிவிடவும் சிறிலங்கா அரசு திட்டமிட்டு செயற்படுகின்றது. இதனையே இம்முறை நடந்த க.பொ.த. சாதாரணதரப்பரீட்சைகள், க.பொ த. உயர்தரப்பரீட்சைகள் எடுத்துக் காட்டுகின்றன. அதேவேளை பரீட்சை தமிழ் பகுதியில் நடைபெற்றது என்பதை வலியுறுத்துவதற்காக ஆயிரக்கணக்கான நிலையங்களில் நடைபெறும் பரீட்சைகளை ஒரு சில நிலையங்களில் நடத்தி சட்டபூர்வ ஆதாரம் தேடப் பார்க்கின்றது சிறிலங்கா அரசாங்கம்.

தமிழ் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை மட்டுமல்ல கல்வியின் நிலைக்களங்களாக இருந்த நூல் நிலையங்களையும் கடந்த காலங்களில் திட்டமிட்டு சிறிலங்கா அரசு அழித்துள்ளது. இவற்றின் வரிசையில் யாழ். பொது நூலகம், ஹாட்லிக் கல்லூரி நூலகம், வசாவிளான் மத்திய மகாவித்தியாலய நூலகம் என்பனவற்றைக் கூறலாம்.

இவ்வாறாக, தமிழர் கல்வியையும், கல்வி கற்பதற்கான உரிமையையும் குழி தோண்டிப் புதைத்துவரும் சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டாயக் கல்வித் திட்டமானது முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் 'தர்மிஷ்டத்தை' போன்றது. இப்போதைய உயர்கல்வி அமைச்சர் 'தார்மீகத்தை'ப் போதித்த முன்னாள் ஜனாதிபதியின் விசுவாசம் மிக்க சீடராகையால் அவரிடம் இருந்து இவ்வாறான திட்டங்கள் வருவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லைதான்.

---

ளை முக்கிய உணவாக அரிசி அமைந்திருந்தாலும் இந் நாடுகளில் பயிரிடப்படும் பாரம்பரிய நெல்லினங்கள் குறைந்த விளைவுகளையே தரக்கூடியதாய் இருந்தன.

மிக உச்சமான ஆராய்ச்சியின் பெறுபேறாக ஓர் அதிசய விளைச்சலைத் தரக்கூடிய ஐ ஆர். 8 என்னும் இனத்தைத் தெரிவு செய்தார்கள். இரு வெவ்வேறு இனங்களைக் கலந்து தெரிவு செய்ததனால் ஐ ஆர். 8 என்னும் புதிய இனம் தோன்றியது. இதன் உச்ச விளைவு ஏக்கருக்கு 270 புசல்கள். விவசாயிகளுக்கு இத் தகைய இனத்தைப் புறக்கணிக்க முடியவில்லை. இந்த இனம் எல்லா நாடுகளுக்கும் விரைவில் பரவியது.

கிழக்குப் பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் பல்லாயிரக் கணக்கான ஏக்கர்களில் இந்த இனம் பயிரிடப்பட்டது. உலகம் முழுவதும் இவ்வினத்தைப் போற்றி எங்கள் மத்தியில் பசுமைப் புரட்சி மலர்ந்து விட்டது எனப் பாராட்டினார்கள். ஆனால் இவ்வினத்தின் மகிமை நிலைநிற்கவில்லை. பல பிரச்சினைகள் உருவாகின. முன்பு ஒரு நாட்டிலும் தென்படாத பூச்சி, புழு அல்லது பூஞ்சணநோய் இவ்வினத்தைப் பாரதூரமாகத் தாக்கியது. இதனால் விளைவு துண்டிக்கப்பட்டது இவ்வினத்தைப் பயிரிடுவதில் அதிக அளவு செலவும் ஏற்பட்டது. இதனால் ஒவ்வொர் நாட்டிற்கும் ஏற்றதாக வேறு கலப்பு இனங்களைத் தெரிவு செய்ய வேண்டியிருந்தது ஆனால் புதிய இனங்களைக் கண்டெடுக்கும் முயற்சியில் அநேகமாக ஐ ஆர். 8 இனத்திற்கு ஒத்த குணங்களை உடைய நெல் இனத்தைக் கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் முயன்றார்கள். எனினும் இப் புதிய இனங்களைப் பயிரிடுவதில் அதிக செலவு ஏற்பட்டது. (உ+ம்: கூடிய உரப்பாசனை, அதிகளவு செலவிலான பயிர்ப்பாதுகாப்பு முதலியன)

தற்பொழுது ஆராய்ச்சியாளர் நெல் விதைத்தலில் பின்வரும் பிரதான குணங்களை (பின் கூறிய முன்னுரிமைப் படி) பெற்றெடுப்பதற்கே முயற்சியெடுக்கிறார்கள்.

(1) அதிக அளவு விளைச்சல்

(2) குறைந்த செலவும், களைகளால் தாக்கப்படுதலை கட்டுப்படுத்தும் திறமையும்

(3) அரிசியின் பசைத் தன்மையின்மை.

(4 உமி அகற்றலில் தேறும் அதிக அளவு முழு அரிசி

(5) புரதச் செறிவு கொண்ட போஷாக்கு தன்மை அதிக அளவு.

(6) அரிசியின் உருவமும் அளவும்

(7) சோற்றின் சுகந்தமும் சுவையும் கொண்டுள்ளமை.

வெள்ளை அரிசி சத்தில்லாதது என்ற மாதிரியான கருத்து இருக்கின்றது உண்மையில் போஷாக்கிலும் சத்துக்களிலும் வெள்ளை அரிசி ஏனைய அரிசிகளுக்கு நிகரானதே.

நீர்ப்பாசன வசதியுடனான நெற் செய்கை பற்றிய ஆய்வில் பி ஜி 11 11 இனம் தொடர்ச்சியாகச் சிறந்த விளைச்சலைத் தரவல்லது என்று நாம் அறிய முடிந்தது. இந்த இனப்பயிர் இப்பொழுது மன்னார், வவுனியா பகுதிகளில் பிரதானமாகச் செய்கை பண்ணப்பட்டு வருகிறது. இவ்வினம் மலேசிய இனத்தை எங்கள் நாட்டுப் பலபினம் ஒன்றுடன் கலந்து பெற்ற ஓர் இனமாகும் (என்கரெக் X எச் -8) X எச் 8, 1969 ஆம் ஆண்டு சிறுபோகச் செய்கையின் போது மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த முயற்சியில் ஐ ஆர். 8 இனத்தையும் விட அதிகளவு விளைச்சலை பி ஜி 11 - 11 இனம் கொடுத்தது தொடர்ந்து 20 வருடங்களாக, நிதானமான விளைச்சலைக் கொடுப்பதனால் சிறந்த அனுபவமுள்ள விவசாயிகள் அனைவரும் இவ்வின நெல்லையே விரும்புகிறார்கள்.

இந்த நெல்லின் மணி அளவில் சிறியதாக இருப்பதனால் விதைப்புக்குப் பயன்படுத்தும் அளவில் மற்றைய இனத்திலும் பார்க்க 25 வீதம் குறைந்த அளவே போதுமாகிறது. இந்த இன அரிசி வெளி மாவட்டங்களிலும் விரும்பப் படுகிறது. உணவு விடுதிகளில் இந்த இன அரிசிக்குத் தனி மதிப்பு உண்டு. நீர்வளம் முக்கியமானதாகும்.

எமது தன்னிறைவு முயற்சியில் நாம் எல்லோரும் பங்காளிகளாக இருப்பதனால் நாம் நிற அரிசியை உணவாக்கிக் கொள்வதைத் தவிர்த்து பி ஜி. 11 - 11. இன அரிசியையோ அல்லது வேறு குறைந்த வயதுடைய வெள்ளைநிற அரிசி இனங்களையோ உணவாகக் கொள்ளப்பழக வேண்டும். சம அளவிலான பல்வேறுபட்ட அரிசியினங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது பி. ஜி 11-11 மணி (அரிசி) அதன் சிறிய அளவின் தன்மையினால் அதிக அளவிலான பரப்பளவைக் கொண்டிருப்பதனால் அதிக அளவு தவிட்டைக் கொண்டிருக்கிறது இதனால் அதிக அளவிலான புரதத்தையும் கொண்டுள்ளதாகிறது இந்த அரிசி தன்னுள் 8 வீதமான புரதச்சத்தைக் கொண்டுள்ளது. ஆகவே இந்தப் பிரதேசத்தில் விளைகின்ற மற்ற எந்த அரிசியிலும் பார்க்க அதிகமான அளவு போஷாக்குத் தன்மையுடையதாகிறது அதன் சுவை எவ்வகைச் சுபாவுக்கும் நிகரானதாகிறதோடு சமையல் செய்வதற்கும் உள்ளூர் இன அரிசிகளிலும் குறைந்த அளவு நேரமே எடுக்கிறது.

எனவே பாரம்பரிய இனங்களாயினும் நிற அரிசியை உணவாகக் கொள்வதைவிட்டு நாம் எல்லோரும் பி ஜி 11-11 போன்ற இனங்களாகும் வெள்ளை வர்க்க அரிசியை, எங்கள் நாட்டின் நன்மையைக் கருதி, உண்ணும் பழக்கத்தை உடனே கையாளுவோமாக.

- தமிழீழ ஆய்வு நிறுவனம்.

---

# தி. மு. க. அரசை கலைக்குமாறு ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக்கழக அரசாங்கத்தைக் கலைத்து விடுமாறு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் செல்வி. ஜெயலலிதா இந்தியப் பிரதமர் சந்திரசேகரரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னைக்கு விஜயம் செய்த பிரதமர் சந்திரசேகரர். செல்வி. ஜெயலலிதாவை அவரது இல்லத்தில் சந்தித்து தமிழக நிலைமை குறித்து ஆலோசனை நடத்தினார். அப்போதே தாம் இவ்வாறு கேட்டதாக செல்வி ஜெயலலிதா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிரதமர் சந்திரசேகரின் அரசாங்கத்திற்கு தமது கட்சி அளித்து வரும் ஆதரவு நிபந்தனையற்றது என்று தெரிவித்த ஜெயலலிதா தாம் எந்தக் கோரிக்கையையும் பிரதமரிடம் விடுக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

ஆனால் தமிழகத்தின் சட்டம், ஒழுங்கு நிலைமை குறித்தே தி.மு.க அரசாங்கத்தை கலைத்து விடுமாறு கேட்டதாகவும் அவர் கூறினார்.

---

# பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த இ. துரைசிங்கம் என்பவரது உணவு முத்திரை கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

